
பரிசுத்த பவுல் ஆலயம் - குவைத்
அஹமதி தமிழ் திருச்சபை
மாத இதழ்
டிசம்பர் 2012
இதழ் : 08
மலர் 13
பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா
ஜனத்துக்கும் மிகுந்த
சந்தோஷத்தை உண்டாக்கும்
நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்
லூக். 2:10



## உங்கள் சகோதரர் சிந்தனையில்



கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! ஆண்டவரும் இரட்சகருமாகிய கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் உங்கள் ஒவ்வொருவரையும் வாழ்த்துகிறேன். கிறிஸ்து இயேசுவின் பெரிதான கிருபையால் இந்த வருடத்தின் கடைசி மாதத்தில் பிரவேசிக்கும் பாக்கியத்தை தேவன் நமக்கு தந்திருக்கிறார். கடந்த 11 மாதங்களும் நம்மைக் காத்து கொண்டார். நமது தேவைகளை சந்தித்தார். நமது சபையின் ஆராதனைகள், ஊழியங்கள் எல்லாவற்றிலும் தேவன் மகிமை அடைந்தார். டிசம்பர் மாதம் நமது இரட்சகராகிய கர்த்தர் இயேசு, தம்மை தாழ்த்தி உலகில் மனிதனாக வந்ததை நினைவு கூறும் மாதமாக உலகம் முழுவதும் அனுசரிக்கிறோம்.

இயேசு உலகத்தில் வந்த நோக்கத்தை தியானித்தால் நமது ஆவிக்குரிய நிலையை, சீர்தூக்கி பார்க்க உதவியாக இருக்கும். **"அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக, ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்"** (மத் 1:21) மனுகுலம் பாவத்தில் விழுந்து, அதிலிருந்து வெளியே வரமுடியாத பள்ளத்தில் இருந்ததால் எத்தனையோ தீர்க்கதரிசிகளை அனுப்பியும் மனு குலத்தால் மீண்டு வர முடியவில்லை. ஆதலால் தேவனே தன்னை தாழ்த்தி, மனிதனாக உலகில் வந்து மனுகுலத்தை மீட்கும் திட்டத்தை செயல்படுத்தினார். இந்த திட்டத்தை உலக தோற்றத்திற்கு முன்னே தமக்குள்ளாக தேவன் வைத்திருந்தார் (எபே 1:4).

பிதாவின் பிரசன்னத்தைவிட்டு தூரமாய் இருக்கும் ஒவ்வொருவரையும், மறுபடியும் பிதாவின் சமூகத்திற்குள் (ஒளிக்குள்) கொண்டுவரும்படி, இயேசுவாய் உலகில் தம்மை தாழ்த்தி வந்தார். பாவத்தில் மூழ்கிக் கிடந்த நாம், பிதாவின் சமூகத்திற்கு வர முடியாது. அதனால் இயேசு வந்து தம்மை சிலுவையில் ஒப்புக் கொடுத்தபடியால், அந்த பலியின்மூலம் நமக்கு மன்னிப்பை தரு கிறார். அது மாத்திரமல்ல அந்த பாவ வாழ்க்கையிலிருந்து நமக்கு விடுதலை தருகிறார். அதுதான் கிருபை: **அவர் சத்தியமும் கிருபையும் நிறைந்தவராய் நமக்குள் வாசம் பண்ணினார்.** (யோவ 1:14).

எனக்காக யாவையும் செய்து முடிக்கப்போகிற தேவனாகிய உன்னதமான தேவனை நோக்கிக் கூப்பிடுவேன். -சங். 57:2

இந்த வருடத்தின் கடைசி மாதத்தில் இருக்கிற நாம், கிறிஸ்துமஸ் பண்டிகை என்று கொண்டாடிக் கொண்டு மட்டும் இருக்கிறேனா! அல்லது என் பாவக் குழியிலிருந்து இயேசுவால் மீட்கப்பட்டு விடுதலை அடைந்து இருக்கிறேனா என்று நம்மை ஆராய்ந்து பார்ப்போம். ஏனென்றால் இயேசு 2012 ஆண்டுகளுக்கு முன்பாய் நம்மை நமது பாவ வாழ்க்கையிலிருந்து விடுவிப்பதற்காக உலகில் வந்தார். ஆனால் அவர் சீக்கிரமாய் ராஜாதி ராஜாவாய், நியாயதிபதியாய் வர இருக்கிறார். அவர் உலகில் பிறந்ததையே கொண்டாடிக் கொண்டு அவர் வந்த நோக்கத்தை மறந்து போகக் கூடாது. அவர் சீக்கிரமாய் வருவதையும் மறந்து போகக்கூடாது. அவர் வருகைக்கு நம்மை ஆயத்தப்படுத்துவோம். மற்றவர்களும் ஆயத்தப்பட நம்மால் முடிந்த முயற்சியை, உதவிகளை செய்வோம். அது பாரம்பரியமாய் வருஷாவருஷம் செய்கிறேன் என்றல்ல: ஒரு பாரத்தோடு, உற்சாகத்தோடு, சுயநலமில்லா நோக்கத்தோடு செய்வோம். இதுவரை போன வருடங்கள் போகட்டும். இந்த வருடத்தின் முடிவில் நிற்கிற நாம் தனித்தனியாய் ஒரு நல்ல தீர்மானம் எடுப்போம். தேவன் நம்மோடு இருந்து தமது கிருபையை பெருகபண்ணுவாராக!

சபையார் யாவருக்கும் சபையின் செயற்குழு சார்பாகவும், எங்கள் குடும்பத்தின் சார்பாகவும் கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்கள்.

**கிறிஸ்துவுக்குள்**
**அன்பு சகோ. ரவிச்சந்திரன்**

---

## சபையின் 2012-ம் ஆண்டின் வாக்குத்தத்தம்

**“பலங்கொண்டு திடமனதாயிரு; திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார்”**

யோசு. **1:9**

பழிவாங்குதலை நீதிமான் காணும்போது மகிழுவான். -சங். 58:10



# மிகுந்த சந்தோஷம்



**"பயப்படாதிருங்கள்ஹ இதோ எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்"** (லூக். 2:10). இயேசுவின் பிறப்பு முதலில் மேய்ப்பர்களுக்கு அறிவிக்கப்பட்டது. சிறுபிள்ளைகள் இதை நாடகமாக நடித்துக் காட்டும் பொழுது மேய்ப்பர்கள் தூங்கிக் கொண்டிருப்பதைப் போல நடித்துக்காட்டுவார்கள். ஆனால் வேத வசனம் சொல்லுகிறது அப்பொழுது அந்த நாட்டிலே மேய்ப்பர்கள் வயல் வெளியில் தங்கி இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக் கொண்டிருந்தார்கள் என்று.

**1. மந்தையைக் காக்கும் மேய்ப்பர்கள்**: — மந்தையை (ஆடுகளை) விட்டுவிட்டு செல்லும் மேய்ப்பர்கள் அல்ல.அவர்கள் ஆடுகளோடு சேர்ந்து வயல் வெளியில் தங்கின மேய்ப்பர்கள். பொறுப்பாக தங்கள் மந்தையை காத்துக் கொண்டிருந்தார்கள். மேய்ப்பர்களின் பொறுப்பு ஆடுகளுக்கு பாதுகாப்பு. மேய்ப்பர்களின் தியாகம் ஆடுகளுக்கு சுகம். நல்ல மேய்ப்பனாக பூமியில் பிறந்த இயேசுவின் நற்செய்தி அந்த மேய்ப்பர்களுக்கு அறிவிக்கப்படுகிறது. குடும்பங்களை, திருச்சபையை, தேசங்களை பிசாசின் பிடியிலிருந்து தப்புவிக்கவும் பாதுகாக்கவும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நல்ல மேய்ப்பர்களை தேடுகிறார். ஒருமுறை இஸ்ரவேலருக்கும் அமலேக்கியருக்கும் போர் நடந்தது. மோசே தன் கையை ஏறெடுத்திருக்கையில் இஸ்ரவேலர் மேற்கொண்டார்கள்ஹ அவன் தன் கையைத் தாழ விடுகையில் அமலேக்கியர் மேற்கொண்டார்கள் (யாத். 17:11). தேவனை நோக்கி ஜெபிக்கும் போது நம்முடைய குடும்பம், திருச்சபை, தேசம் பாதுகாக்கப்படுகிறதுஹ பிசாசின் பிடியிலிருந்து தப்புவிக்கப்படுகிறது. **"அந்நாட்களிலே இயேசு ஜெபம் பண்ணும்படி ஒரு மலையின் மேல் ஏறி இராமுழுவதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார்"** (லூக். 6:12). நம்முடைய குடும்பத்திற்காக, திருச்சபைக்காக, தேசத்திற்காக ஜெபிக்கும் நல்ல மேய்ப்பனாக நாம் இருக்கிறோமா! இராமுழுவதும் விழித்திருந்து ஜெபிக்கும் நல்ல மேய்ப்பர்கள் ஆண்டவருக்கு தேவை. அவர்களோடு பேச தேவன் விரும்புகிறார். எனவேதான் இயேசுவின் பிறப்பின் நற்செய்தி முதலாவதாக மேய்ப்பர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

**2. பயத்தை அல்ல மிகுந்த சந்தோஷம் தரும் நற்செய்தி**: — சிறு பிள்ளைகள் தொடங்கி பெரியவர் வரை ஏதாவது ஒரு செயலுக்கு பயப்படுவார்கள். எனவேதான் தேவதூதன் மேய்ப்பர்களை நோக்கிஹ பயப்படாதிருங்கள் என்று ஆரம்பித்து, மிகுந்த சந்தோஷம் உண்டாக்கும் நற்செய்தியை அறிவிக்கின்றான் (லூக். 2:10). இயேசு நம்முடைய உள்ளத்தில் பிறக்கும் போது மிகுந்த சந்தோஷம் உண்டாகும். பயங்கள் பறந்து போகும். இயேசு பிறப்பதற்கு இடம் கொடுக்க சத்திரம் மறுத்ததுஹ ஆனால் முன்னணை அனுமதித்தது. இயேசு நம் இருதயத்தில் வாசம் செய்ய இடம் கொடுப்போமா! ஆண்டவருக்கு நம்முடைய வாழ்வில் முதலிடம் கொடுத்து அவரை

தேவன் எனக்கு உயர்ந்த அடைக்கலமும்; கிருபையுள்ள என் தேவனுமாயிருக்கிறார். –சங். 59:17

தேடுவோம். **"இயேசு எப்படிப் பட்டவரோ என்று அவரைப் பார்க்க (சகேயு) வகை தேடினான்"** (லூக். *19:3*). **"சந்தோஷத்தோடே அவரை அழைத்துக் கொண்டுபோனான்"** (லூக். *19:6*). **"நான் கர்த்தரை தேடினேன் அவர் எனக்கு செவி கொடுத்து என்னுடைய எல்லா பயத்துக்கும் என்னை நீங்கலாக்கிவிட்டார்"** (சங். *34:4*).

**3. மகிமையும் துதியும் தேவனுக்கே**: **—** இயேசுவின் பிறப்பு உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையைத் தந்தது. பரம சேனையின் திரள் **"உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமை என்று சொல்லி தேவனை துதித்தார்கள்"** (லூக். 2:14). இனி நான் அல்ல கிறிஸ்துவே எனக்குள் ஜீவிக்கிறார் என்று பவுல் சொல்கிறார். அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும் என்று யோவான்ஸ்நானகன் சொல்கிறார் (யோவா. *3:30*). பூமியிலே சமாதானமும் மனுஷர்மேல் பிரியமும் உண்டாக பிறந்தார் இயேசு. மனிதனுக்கு அல்ல தேவனுக்கே மகிமையும் துதியும் செலுத்துவோம். எங்களுக்கு அல்ல கர்த்தாவே, எங்களுக்கு அல்ல... உம்முடைய நாமத்திற்கே மகிமை வரப்பண்ணும் (சங். *115:1*) என்று சொல்லி தேவனை துதித்துப் பாடுவோம். மிகுந்த சந்தோஷத்தோடு கிறிஸ்துமஸ் பிறப்பைக் கொண்டாடுவோம். அல்லேலூயா!

**கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்களுடன்**
**சகோ. கிறிஸ்டோபர் தேவராஜ்**

## WINTER WILL BE VERY COLD THIS YEAR
## _ASTRONOMER

The winter season this year will be very cold, predicted Astronomer Dr. Saleh Al Ujairi. Temperature during this season, particularly in January, could plunge to less than 2 degrees below zero in the open areas and in the desert. He said the winds will turn north westerly and there could be slight dust. He pointed that from Nov 16 onwards, the **young and old should be wearing winter clothes**.

# WHAT IS LOVE

*L – Life*
*O – On*
*V – Value*
*E – Education*

When we look at the value education, we learn all the moral values like sharing, happiness, peace, friendly nature, trust, calm etc… (Gal. 5:22).

If we do not show Love, we do not know God. (IJohn. 4:8). When we follow all these values, we will have the following characters:

1) No proudness
2) No fighting, arguments etc…
3) No bad thoughts
4) No happiness for unwanted things (I Cor. 13)
5) No worries (Mat. 6:27)
6) No bad words (Col. 3:8)
7) No adultery
8) Uncleanliness (Col. 3:5)
9) No stealing

If we show all these in our day today life, the worldly people can see God in us. Try to lead a role model life with prayer.

**In Christ**
**Bro. Clement**

## CHILDREN THOSE WHO WROTE ANSWERS

Hanshika,
Sharon Grace,
Joseph Prince,
Lydia,
Geona Shamy,
Sharon Keerthana,
Jessly,
Jainy,
Angeline Priscilla,
Helen Prarthana,

தேவனே; என் கூப்பிடுதலைக் கேட்டு; என் விண்ணப்பத்தைக் கவனியும். _சங். 61:1



## ஒரு ஊரில்

## உலகே மாயம்! வாழ்வே மாயம்!!

ஒரு தகப்பனுக்கு நான்கு குமாரர்கள் இருந்தார்கள். ஒருநாள் அந்த தகப்பனார் தனது குமாரர்களை அழைத்து “நீங்கள் என்மேல் அன்பாய் இருக்கிறீர்களா?” என்று கேட்டார். உடனே நான்கு குமாரர்களும் அப்பா உங்களுக்காக நாங்கள் ஜீவனையும் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று ஒருசேர சொன்னார்கள். தகப்பனும் தன் குமாரர்கள் தன் மேல் வைத்திருக்கும் அன்பையும் மரியாதையையும் நினைத்து வியந்து மகிழ்ந்தார். நாட்கள் சிலநடந்தன.. கடந்தன..தகப்பனார்முதிர்வயதாகி படுத்த படுக்கையானார். தன் குமாரன்களில் ஒருவர் கூட அவர் என்னவானார் என்று வந்து எட்டிப்பார்க்கவில்லை. மிகுந்த மனமடிவாகி கசந்துபோன தகப்பனார் தனது மகன்களை வரவழைத்தார். மகன்களும் வீடு (வீட்டை பங்கு போட) வீதம் என்று தனக்குள்ளே எண்ணிக் கொண்டு விரைந்து வந்து சேர்ந்தனர். அவர்களிடம் தகப்பனார் என் அன்பு மகன்களே! என்னால் எழுந்து எங்கும் செல்ல முடியவில்லை. ஆகவே என்னை மருத்துவனைக்கு எடுத்துச் செல்லுங்கள்: எனக்கும் தேவையானதை வாங்கித்தாருங்கள் என்று கேட்டுக் கொண்டார். ஆனால் எந்த மகனும் அதை தன் காதிலே போட்டுக் கொள்ளவில்லை: ஏற்றுக் கொள்ளவில்லைஹ எதுவுமே வாங்கியும் தரவில்லை.

மிக வேதனை அடைந்த தகப்பன் அவர்களைப்பார்த்து, மகன்களே! எனக்காக ஜீவனையும் கொடுப்பேன் என்று எவ்வளவு அன்பாய் பேசினீர்கள்: இப்பொழுது நான் கேட்டுக் கொள்ளும் இந்த சின்ன தேவையைக் கூட எனக்கு செய்ய உங்களுக்கு முடியவில்லையா! என்று ஆதங்கத்துடன் கேட்டார். அதற்கு குமாரர்கள், “அப்பா நாங்கள் இப்பொழுதும் சொல்கிறோம் உங்களுக்காக ஜீவனைக் கொடுக்கவும் நாங்கள் தயார். ஆனால் அதை வாங்கித்தா, இதை வாங்கித்தா, மருத்துவமனைக்கு கொண்டு செல், இதை செய், அதை செய் என்று மட்டும் பேசி எங்கள் நேரத்தையும் உங்கள் வார்த்தையையும் வீண் செய்யாதீர்:எங்களால் அப்படி எதுவும் செய்ய முடியாது என்று பதிலுரைத்தனர்".

இதே நிகழ்வுகள் தான் இன்றும் நம் கிறிஸ்தவர்களிடையே நடந்து கொண்டிருக்கிறது. இயேசுவுக்காக ஓடியாடி உழைக்க ஆர்வம் காட்டுகின்றனர். இயேசுவுக்காகவே வாழ்கிறேன் என்று பலர் சாட்சியும் சொல்கின்றனர். ஆனால் இயேசுவின் வார்த்தைகளை முழுமையாக தங்கள் வாழ்க்கையில் கைக்கொண்டு வாழ்கின்றனரா! என்று ஆராய்ந்து பார்த்தால். . . . அதெல்லாம் இந்த உலகில் எளிதில் முடியாது பிரதர் (அல்லது) சிஸ்டர் என்று சுலபமாக பதில் சொல்லி நகர்ந்து விடுகிறார்கள்.

ஆனால் எல்லோருக்கும் இரட்சகர் இயேசு மீண்டும் மீண்டும் சொன்ன வார்த்தைகள், **“நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்”** (யோவா. 14:15). **“இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான்”** (யோவா. 14:23). **“அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவன் அவரில் நிலைத்திருக்கிறான். அவரும் அவனில் நிலைத்திருக்கிறார்”** (1யோவா. 3:24). எனவே உலகையும் உறவையும் மட்டும் நம்பி வாழாமல், எந்த நிலையிலும் இயேசுவின் வார்த்தைகளை மீறாமல் வாழக் கற்றுக் கொள்வோம். அதுவே நாம் இயேசுவின் மேல் வைத்திருக்கும் உண்மையான அன்பாக அறியப்படும். அதுவே நியாயத்தீர்ப்பு நாளில் நம்மை பரத்தில் சேர்க்கும்.

**கர்த்தரின் கிருபையில்**

**லிடியா ஆ. தாஸ்**

என் ஆத்துமாவே; தேவனையே நோக்கி அமர்ந்திரு; நான் நம்புகிறது அவராலே வரும். -சங். 62:5

## சுய சரிதை




எங்கள் வரலாற்றுப் பாதையில்
அடிக்கடி வழுக்கி விழுகிறோம்
தனி வாழ்வில்...
குடும்ப வாழ்வில்...
சபை வாழ்வில்...
சமூக வாழ்வில்...
இது சகஜமாகிப்போனது.
தேவனே!
எங்களுக்கு நீர் ஈந்தது வழுக்கல் பாதையோ!
இல்லை... இல்லை...
நீர் கொடுத்தது அமர்ந்த நீரூற்றுப்பாதைகள்.
நாங்கள் தான் பாவக் களைகளை வளரவிட்டோம்.
இதன் பலனால் நாங்களே விழுகிறோம்...
கர்த்தாவே!
என்னில் உள்ள நச்சுக் களைகளை துடைத்துவிடும்.
மீண்டும் நான் வழுக்கி விழாமல் தடுத்துவிடும்.

**- செல்வகுமார்**

---



## டிசம்பர் மாதக் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சுகந்தி தம்புகுமார்
Sis. லதா கிறிஸ்டோபர்
Sis. மெர்லின் ஜோன்ஸ்
Sis. ஜோன் அசோக்குமார்
Sis. சாந்தி ஸ்ரீனிவாசன்
Sis. ஜரின் ஃபிரீடா சிங்
Sis. அனிதா தாஸ்
Sis. பியூலா மெர்சி பால்
Bro. ஆல்பிரட்
Bro. ஜாண்
Bro. ஜாண்சன்
Sis. மெர்ஸ்லின் யேசுரெத்தினம்
Sis. ஹேனா எசேக்கியேல்
Sis. ஜரின் சில்வா ஆல்பிரட்
Sis. கீதா ஜெயக்குமார்
Sis. மரகதம் ஸ்டீபன்
Sis. அனுஷ்யா டேவிட்சன்
Sis. ராதா இவாஞ்சலின்
Sis. ஹெப்சி சாம் ஆனந்த்
Bro. தர்மர்
Bro. கிளமண்ட்

உமது செட்டைகளின் நிழலிலே களிகூருகிறேன். -சங். 63:7



## நவம்பர் மாதக் கேள்விகளுக்கு பதில்கள்

1. தவறு: 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் (1தீமோ. 5:9)
2. சரி (1தெச. 4:13)
3. சரி (1தீமோ. 1:19)
4. சரி (2தெச. 2:3,8)
5. தவறு (1தெச. 5:8)
6. தவறு (1தீமோ. 6:6)
7. தவறு (1தீமோ. 5:6)
8. தவறு (2தெச. 2:2 – 8)
   (1) விசுவாச துரோகம் நேரிடுதல் (2)தடை செய்கிறவன் நீக்கப்படுதல்
   (3) கேட்டின் மகன் வெளிப்படுதல் (4) கிறிஸ்துவின் நாள் வருதல்
9. – தங்கள் சொந்த குடும்பத்தை தேவ பக்தியாய் விசாரிப்பது (1தீமோ. 5:4)
   – பெற்றார் செய்த நன்மைகளுக்குப் பதில் நன்மைகளைச் செய்யக்கற்றுக் கொள்வது (1தீமோ. 5:4)
10. – தேவ பக்திக்குரிய இரகசியம் (1தீமோ. 3:16)
    – விசுவாசத்தின் இரகசியம்(1தீமோ. 3:9) – அக்கிரமத்தின் இரகசியம் (2தெச. 2:7)
11. – பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பது (1தெச. 4:3)
    – எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்ய வேண்டுமென்பது (2தெச. 5:18)
    – எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்பது (1தீமோ. 2:4)
    – எல்லா மனுஷரும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவேண்டுமென்பது (1தீமோ. 2:4)
12. – காக்கப்பட வேண்டியதுஹ ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் (1தெச. 5:23)
    – ஸ்திரப்படுத்தப்பட வேண்டியதுஹ இருதயம் (1தெச. 3:13)
13. பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் (1தெச. 5:22) – ஒழுங்கற்று நடக்கிற எந்த சகோதரனையும் (2தெச. 3:6) – சீர்கேடான வீண் பேச்சுகளுக்கு (1தீமோ. 6:20) – கொள்கையின் விபரீதங்களுக்கு (1தீமோ. 6:20)
14. – பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் (1தீமோ. 1:15)
    – கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான்(1தீமோ. 3:1)
    – நாம் அவரோடே கூட மரித்தோமானால் அவரோடே கூட பிழைத்திருப்போம் (2தீமோ. 2:11) – அவரோடே கூட பாடுகளை சகித்தோமானால் அவரோடே கூட ஆளுகையும் செய்வோம் (2தீமோ. 2:12) – நாம் அவரை மறுதலித்தால் அவரும் நம்மை மறுதலிப்பார் (2தீமோ. 2:12) – நாம் உண்மையில்லாதவர்களாயிருந்தாலும் அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார் (2தீமோ. 2:13)
15. – பண ஆசை (அல்லது) இச்சை (1தீமோ. 6:10) – சீர்கேடான வீண்பேச்சுகளைப் பாராட்டி(1தீமோ. 6:20 – 21) – கொள்கையின் விபரீதங்களை பாராட்டி (1தீமோ. 6:20 – 21).

அவள் ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; _மத். 1:21

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்




- செல்வி. அனுஷா செலஸ்டி
- செல்வி. ஜெனிதா பால் பாண்டியராஜ்
- செல்வி. கிரேஸ்லின் சாம் ஞானதுரை
- செல்வன். சாமுவேல் ஜோசப் ஜாண்
- செல்வன். எமில் கிங்ஸ்லி
- செல்வன். ஜாண்சன் ராஜவேல்
- செல்வன். ஜாக் சாமுவேல் ஜாண்சன்
- செல்வன். பிரின்ஸ் ஜோசப் பிரேம்குமார்
- செல்வன். பிரவீன் ஜெயச்சந்திரன்
- சகோதரி. சிந்து சஜின் ராஜன்
- சகோதரி. மேரி ஷீபாராணி வெங்கடேஷ்
- சகோதரி. கிளாடிஸ் பாப்பி சிவகுமார்
- சகோதரி. ஷீஜா ஸ்டீபன்
- சகோதரி. சசிரேகா சதீஸ்குமார்
- சகோதரி. ஜீனா சதீஸ்குமார்
- சகோதரி. கிறிஸ்டிலின் ஜோயல்
- சகோதரி. கிறிஸ்டீனா முத்தையா
- சகோதரி. பிரிந்தா சாலொமோன்
- சகோ. ஃபிரான்ங் வில்லியம்
- சகோ. சாமுவேல் ஜாண்சன்
- சகோ. சிவகுமார்
- சகோ. ஆல்வின் முத்தையா
- சகோ. எட்வின் சாம் ஞானதுரை
- சகோ. அலெக்சாண்டர் அந்தோனி சாமி

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

- திருமதி & திரு. ஜாண் டேவிட்சன்
- திருமதி & திரு. வெங்கடேஷ்
- திருமதி & திரு. தாஸ்
- திருமதி & திரு. கிறிஸ்டோபர் தேவராஜ்
- திருமதி & திரு. ஜாண்சன்
- திருமதி & திரு. ஆல்வின் முத்தையா
- திருமதி & திரு. ஆல்வின் டேனி
- திருமதி & திரு. ஜோயல் ஜெயசீலன்
- திருமதி & திரு. பால் அறிவுச்சுடர்



நீர் என்னுடைய நேசகுமாரன்; உம்மில் பிரியமாயிருக்கிறேன் என்று
வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று. -மாற். 1:11

# டிசம்பர் 2012 ஆலய ஆராதனைகள்

ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | செய்தி |
|---|---|
| 02-12-2012 | சகோ. சுகுமார் |
| 09-12-2012 | சகோ. ஸ்டாலின் |
| 16-12-2012 | சகோ. எபிநேசர் |
| 23-12-2012 | சகோ. பிரேம்குமார் |
| 30-12-2012 | சகோ. கிறிஸ்டோபர் |

வெள்ளி ஆராதனை மாலை 4:40 முதல் 6:20 வரை

| நாள் | நடத்துபவர் | செய்தி |
|---|---|---|
| 07-12-2012 | பாடகற்குழுவினர் கிறிஸ்துமஸ் பாடல் ஆராதனை | |
| 14-12-2012 | ICC பாடல் ஆராதனை | |
| 21-12-2012 | தமிழ் கிறிஸ்தவ சபைகள் மற்றும் குடும்ப பாடல் ஆராதனை | |
| 28-12-2012 | குடும்ப ஆராதனை | |

## சிறப்பு ஆராதனைகள்

25-12-2012 **கிறிஸ்துமஸ் ஆராதனை** 5.40 pm to 7.10 pm
**(செய்தி:** Rev. Harison Chinna kumar)

31-12-2012 **விழித்திருப்பு ஆராதனை** 10.00 pm to 1.30 am
**இடம்:** Opp. Shrimpy, Bldg. No-218, Mangaf

01-01-2013 **புதுவருட ஆராதனை** 5.00 pm to 6.30 pm

## கிறிஸ்துமஸ் கீத பவனியின் நாட்களும் இடங்களும்

08-12-2012 to 11-12-2012 **ஃபாஹாகீல் பகுதி**

12-12-2012 to 16-12-2012 **மங்காஃப் பகுதி**

17-12-2012 to 22-12-2012 **அபுஹலிஃபா பகுதி**

எனக்குப் பின் வருகிறவர் எனக்கு முன்னிருந்தவர்; ஆகையால் அவர் என்னிலும் மேன்மையுள்ளவர். _யோவா. 1:15

# அப். அந்திரேயாவின் இரத்த சாட்சி

கலிலேயாவைச் சேர்ந்த பெத்சாயிதாவில் பிறந்த அந்திரேயா பேதுருவின் உடன் பிறந்த தம்பியாவார். இவர்கள் கப்பர்நகூமில் மீன்பிடிக்கும் தொழிலைச் செய்துவந்தார்கள். இவர்களது தகப்பனார் பெயர் யோவான் தாய் யோஹன்னா. அந்திரேயா ஆவிக்குரிய காரியங்களில் ஆர்வமுள்ளவராக இருந்தார். இவர் யோவான்ஸ்நானகனின் பேச்சால் கவரப்பட்டு அவரது சீடர்களில் ஒருவரானார். யோவான்ஸ்நானகனின் அறிவுரையின்படி மேசியாவுக்காக காத்திருந்தார். யோவான்ஸ்நானகன் ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருக்கும்போது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை பார்த்து **“இதோ உலகின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி”** என்று சாட்சி கொடுத்தார். உடனே யோவான்ஸ்நானகனின் சீடர்களில் இருவர் இயேசுவுக்கு பின் சென்றார்கள். இவர்களில் ஒருவர்தான் அந்திரேயா (யோவா. 1:40).

அந்திரேயா இயேசுவின் முதல் சீடர். யோவான்ஸ்நானகனின் சாட்சியைக் கேட்டவுடனே இயேசுதான் மேசியா என்பதை திட்டமாக அறிந்து கொண்ட அந்திரேயா தன்னை முழுவதுமாக ஒப்புக் கொடுத்து இயேசுவுக்கு பின் சென்றார். மட்டுமல்ல அந்திரேயா இயேசுவை மெசியாவாக கண்டவுடனே ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தும் பணியை தனிப்பட்ட வாழ்க்கையில் தொடங்கினார். முதலாவது தனது குடும்பத்தில் தன் உடன் பிறந்தவர்களிடம் பகிர்ந்து கொண்டார். அந்திரேயா அறைகுறையான மனதுடன் சொல்லவில்லை. முழுமனதோடு சகோதரனாகிய பேதுருவிடம் மேசியாவை கண்டோம் என்று சொல்லி இயேசுவினிடத்தில் பேதுருவை அழைத்துச் சென்றார். இயேசு சீமோன் பேதுருவை பார்த்து நீ யோனாவின் மகனாகிய சீமோன் நீ கேபா எனப்படுவாய் என்றார். கேபா என்பதற்கு பாறை என்று அர்த்தமாம்.

இயேசு ஒருமுறை வனாந்தரமான ஒரு இடத்தில் போதனை செய்து கொண்டிருந்தார். நேரம் அதிகமாகிவிட்ட காரணத்தால் இயேசு சீஷர்களைப் பார்த்து நீங்கள் இவர்களுக்கு ஆகாரம் கொடுங்கள் என்றார். இந்த சந்தர்ப்பத்தில் அந்திரேயா இயேசுவின் மீது நம்பிக்கையுடன் அவரிடம் வந்து அடக்கமாக இங்கே ஒரு பையன் இருக்கிறான். அவனிடம் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உண்டு என்றார். எவரேனும் எந்த ஒரு பொருளையும் கொண்டு வந்து இயேசு விடம் கொடுத்தாலும் அந்த பொருளை மிகப் பெரிய அளவில் இயேசுவால் மாற்ற முடியும் என்பதை அந்திரேயா அறிந்திருந்தான். அந்திரேயா பேச்சுத்திறமை அற்றவர். ஆனால் ஒவ்வொருவராக ஆண்டவரிடம் அழைத்துவரும் வல்லமை பெற்றிருந்தார். இவர் பேச்சுத்திறமையற்ற ஊழியர்களுக்கு சவால்விடும் வகையில் இவரது ஊழியம் முன்மாதிரியாக இருந்தது.

பேதுருவை இயேசுவிடம் அழைத்துச் சென்றது அந்திரேயாதான். இருப்பினும் முதலிடத்தையோ புகழையோ நாடாத தன்னலமற்ற தியாக சிந்தையுள்ளவராகவே அந்திரேயா விளங்கினார். இயேசுவின் முதல் அழைப்பைப் பெற்ற அந்திரேயா தன் பெயர் எங்கிருந்தாலும் அதைப்பற்றி கவலை கொள்ளாமல் தனிப்பட்ட ஊழியத்தை

நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; ... அவர் நாமம் அதிசயமானவர்; ஆலோசனைக்கர்த்தா; வல்லமையுள்ள தேவன்; நித்திய பிதா; சமாதானப்பிரபு என்னப்படும். -ஏசா. 9:6

அடக்கத்துடனும், தாழ்மையுடனும், அன்புடனும் செய்தார். இப்படிப்பட்ட பண்பாளர்களே திருச்சபையின் வளர்ச்சிக்குத் தேவை. இன்றைக்கு சிலர் திருச்சபையில் பதவி இல்லாவிட்டால் பணி செய்யமாட்டார்கள். யாக்கோபும் யோவானும் தங்களுக்கு இறைய ரசில் முதலிடம் வேண்டுமென்று இயேசுவிடம் கேட்டார்கள். ஆனால் அந்திரேயாவோ அமைதியும் அடக்கமுமான பண்போடு தன்னலமற்றவராக விளங்கினார்.

யூதர்கள் பிற இனத்தவர்களை வெறுத்தார்கள். இறைவன் தங்களுக்கே உரியவர் என்று அகந்தை கொண்டனர். இயேசு ஒருமுறை சமாரிய ஸ்திரீயிடம் பேசும்போது அவருடைய சீஷர்கள் ஆச்சரியப்பட்டார்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த நற்செய்தி மக்கள் இனத்திற்கு பொதுவானது. இன மொழி வேறுபாடின்றி உலக மக்கள் அனைவருக்கும் உரியது என்பதை இயேசுவின் சீஷர்கள் அறிந்து கொண்டார்கள். இதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் அந்திரேயா தான்.

இவர் தொடக்கத்தில் கப்பத்தோக்கியா, பிந்தினியா, கலாத்தியா, பைசாந்தியம் ஆகிய இடங்களில் நற்செய்திப்பணியை செய்தார். பிறகு ரஷ்யா, கிரீஸ், ஸ்காட்லாந்து ஆகிய நாடுகளிலும் ஊழியம் செய்தார். இவர் கடைசியாக காக்கசீய மலையடிவாரத்தில் ஊழி யம் செய்யச் சென்றார். தற்பொழுது இந்த பகுதி ரஷ்யாவின் ஜார்ஜியாவில் உள்ளது. அங்கு காட்டுமிராண்டிகள் மத்தியில் ஊழியம் செய்தார். ஆதிகால உலகத்தில் அநாக ரீகமான காட்டுமிராண்டிகளாகிய முரடர்களையும் அந்திரேயா இயேசுவிடம் கொண்டு வந்தார். பின்னர் சைபாண்டியம் என்ற இடத்தில் சபைகளை நிறுவினார். அங்கு ஸ்டாகிஸ் என்னும் ஊழியரை பேராயராக அபிஷேகம் செய்தார். இந்த ஊழியத்தின்போது அவர் பலமுறை சிறையிலடைக்கப்பட்டார். கல்லால் எறிந்தும் விரட்டப்பட்டார்.

அந்திரேயா கிரீஸ், நாட்டில் திரேஸ் மாசிடோனியா பகுதிகளில் ஊழியம் செய்தார். இறுதியாக பட்ரோஸ் என்ற பட்டணத்திற்கு சென்றார். அங்கே மாநில ஆளுநர் ஏகீசு வின் மனைவி மாக்சிமில்லா என்பவள் மரணத்தை நெருங்கும் நிலையில் இருந்தாள். இந்நிலையில் அப். அந்திரேயா மாக்சிமில்லாளை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பெயரால் குணப்படுத்தினார். சுகம் பெற்ற மாக்சிமில்லா இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டாள். தன் மனைவி கிறிஸ்தவளானது ஆளுநர் ஏகீசுக்கு பிடிக்கவில்லை. மேலும் ஏகீசுக்கு ஸ்ட்ராட்டோகிள்சு என்ற சகோதரன் இருந்தான். அவனுடைய வேலைக்காரன் ஆல்க்மேன் வியாதிப்பட்டான் அவனையும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அந்திரேயா சுகமாக்கினார். இதனால் ஏகீசின் சகோ தரனும் கிறிஸ்தவனானான். இப்படி ஏகீசின் மனைவியும் அவன் உடன் பிறந்த சகோத ரனும் அந்திரேயாவால் கிறிஸ்தவர்களானதால் ஏகீசு கோபம் கொண்டு அந்திரேயாவை சிறையில் அடைத்தான். ஊழியத்தை கைவிடுமாறு கண்டனம் செய்தான்.

ஆனால் அந்திரேயாவோ ஊழியத்தைத் தொடர்ந்து செய்து வந்ததால் கடும் கோபம் கொண்ட ஏகீசு, அந்திரேயாவை அடித்து அதிக வேதனைப்படுத்த நினைத்தான். எனவே பல நாட்கள் தொடர்ந்து வேதனைப்பட வேண்டும் என்று அந்திரேயாவை சிலுவையில் ஆணிகளால் அடிக்காமல் கயிறுகளால் இறுக கட்டப்பட்டு, பசியினா லும் தாகத்தினாலும் வேதனையடைந்து சாவதை எல்லோரும் காணவேண்டும்

என்று கட்டளையிட்டான். அதன்படி ஏழு ரோம போர்ச்சேவகர்கள் அந்திரேயாவை சாட்டையினால் அடித்து துன்பப்படுத்தினார்கள். கடைசியில் அந்திரேயாவோ என் ஆண்டவர் மரித்த வடிவில் நான் மரிப்பதற்கு தகுதியற்றவன். என்னை பெருக்கல் குறி சிலுவையில் கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அவ்வண்ணமாகவே பெருக்கல் குறி சிலுவையில் இறுக கட்டினார்கள். இரண்டு நாட்கள் வேதனையின் மத்தியிலும் இயேசு கிறிஸ்துவை பற்றி அங்கு நின்றவர்களிடம் சாட்சி கூறினார். அந்திரேயா தன் உயிர் பிரியும் சமயத்தில் என்னை ஏற்றுக் கொள்ளும் கிறிஸ்து இயேசுவே உம்மை நான் பார்த்தேன்ஹ உம்மை நான் நேசித்தேன்ஹ உம்மில் நான் இருக்கிறேன்ஹ என் ஆவியை ஏற்றுக் கொள்ளும் என்று ஜெபித்து தன் ஜீவனை விட்டார் அப்போஸ்தலராகிய அந்திரேயா.

இவ்விதமாக அப்போஸ்தலராகிய அந்திரேயா கி.பி *69* —ம் ஆண்டு நவம்பர் மாதம் *30* —ம் தேதி இரத்த சாட்சியாக மரித்தார். மாக்சிமில்லா என்பவள் அப். அந்திரேயாவின் உடலை எடுத்து பட்ரோசில் அடக்கம் செய்தாள். பேரரசர் கான்ஸ்டன்டைனின் மகன் கான்ஸ்டன்டியஸ் பேரரசரானபோது கி.பி *356* —ல் அப். அந்திரேயாவின் உடல் எலும்புகளை எடுத்து சைபாண்டியத்திலுள்ள தூய அப்போஸ்தலர் ஆலயத்தின் பீடத்தில் வைத்தார். அவரது கபால எலும்பு மட்டும் பட்ரோசிலே இருந்தது. கி.பி *1460* —ல் துருக்கியர்கள் சைபாண்டியத்தை கைப்பற்றினார்கள். அப்பொழுது அப்போஸ்தலராகிய அந்திரேயாவின் கபால எலும்புகளை அவர்கள் எடுத்துச் சென்று பரிசுத்த பேதுரு ஆலயத்தில் வைத்தனர். *1964* —ல் போப்பாண்டவர் ஆறாம் பால் அப். அந்திரேயாவின் கபால எலும்பை பட்ரோசிலுள்ள கிரேக்க ஆர்த்தோடக்ஸ் திருச்சபைக்குக் கொடுத்தார். இப்போது அந்த இடத்தில் ஒரு பேராலயம் கட்டப்பட்டுள்ளது.

அப். அந்திரேயா இறந்து பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு அவரது சில நினைவுச் சின்னங்கள் ஒரு கப்பலில் ஸ்காட்லாந்து நாட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டது. கப்பல் கரையை நெருங்கும் போது கப்பல் விபத்துக்குள்ளானதால் நீந்தி உயிர் தப்பினார்கள். இவர்கள் அங்குள்ளவர்களுக்கு கிறிஸ்துவை பற்றி பிரசங்கித்தார்கள். அந்த கடற்கரைப் பகுதி பரிசுத்த அந்திரேயா வளைகுடா என அழைக்கப்படுகிறது. பரிசுத்த அந்திரேயா ஸ்காட்லாந்தின் பரிசுத்த பிதாவாக இன்றும் போற்றப்படுகிறார். இப்பொழுதும் இங்கிலாந்து நாட்டுக் கொடியில் அப்போஸ்தலராகிய அந்திரேயாவின் சிலுவை என்றழைக்கப்படும் "X" வடிவ பெருக்கல் குறி காணப்படுகிறது.

**அன்புள்ள சகோதரன்**
**யேசுநாயகம்**

---

**நமது சபையின் மூலமாகத் தாங்கப்படும் இந்திய தேச ஊழியங்களை அறிய, தங்களுடைய நன்கொடைகளினால் தாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய பொறுப்பாளர்.**

சகோ. சிவகுமார் _ போன்: 94494541

---

**நமது சபையின் மூலமாகத் தாங்கப்படும் திக்கற்ற பிள்ளைகள் ஊழியங்களை அறிய, தங்களுடைய நன்கொடைகளினால் தாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய பொறுப்பாளர்.**

சகோ. ரவிஜாண் பீட்டர் _ போன்: 99460225

# ANSWER FOR THE QUIZ (November)

| | | |
|---|---|---|
| 1. | Bethabara | (Jn. 1:28) |
| 2. | 46 years | (Jn. 2:20) |
| 3. | Moses | (Jn. 3:14) |
| 4. | To do the will of God & To finish God's work | (Jn. 4:34) |
| 5. | 38 Years | (Jn. 5:5) |
| 6. | Sea of Galilee | (Jn. 6:1) |
| 7. | He who believes in Jesus | (Jn. 7:38) |
| 8. | Devil | (Jn. 8:44) |
| 9. | Siloam | (Jn. 9:7) |
| 10. | The good shepherd | (Jn. 10:11) |

## ஆண்டிறுதி சிந்தனை




ஓடி மறைந்தே முடியப் போகுதையா இவ்வருடம்
ஓர் நிமிடம் திரும்பிப் பார்ப்போம் கடந்து வந்த பாதைகளை
ஓயாமல் இன்னல்பல எத்தனைதான் வந்தாலும்
ஓங்கி என்றும் வளர்ந்ததன்றோ நம் உள்ளத்தின் விசுவாசம்.

பிழைப்பு நாடி வந்த இடத்தில் – கர்த்தர்
பணிந்து தொழுதிட நல் சபையைத் தந்தார்
பாரங்களை பகிர்ந்து ஜெபித்திட
பாசமுள்ள நல் உள்ளங்களைத் தந்தார்

தடுமாறி தவித்த வேளைகளில் தாங்கி ஏந்தி காத்தாரே
தவறாமல் வசனம் தந்து தைரியப்படுத்தினாரே
தனிமையில் கலங்கி நான் கண்ணீர் சிந்துகையில்
தாயாக அரவணைத்து பாசமழை பொழிந்தாரே

ஆண்டுகள் எத்தனை கடந்தாலும்
ஆசீர் பெற்று வாழ்ந்திடுவோம்
ஆண்டவர் துணை என்றும் நமக்கு உண்டு
ஆவலோடு வரவேர்ப்போம் புதுவருடத்தை.

**- ஸ்டாலின்**

மெய்யாய் தேவன் எனக்குச் செவிகொடுத்தார்; என் ஜெபத்தின் சத்தத்தைக் கேட்டார். _சங். 66:19

# INTERESTING FACTS IN THE BIBLE

## What numbers seem to have importance in the Bible?

The Bible obviously contains many numbers in various contexts. However, anyone looking to study Bible numerology cannot ignore the numbers listed below due to their reoccurrence throughout the Old and New Testament accounts.

### NUMBER : THREE (3)

Temple build with three posts, three beams
The Trinity (God, Son, Holy Spirit)
Christ died for three days
In Revelation, three angels and three demons.

### NUMBER : SIX (6)

Earth made in Six days
Frames made for the tabernacle
Number of the beast is 666
Beast in Revelation has six wings.

### NUMBER : SEVEN (7)

God rested on the seventh day
Noah took seven each of clean animals onto the ark
Jesus said to forgive not just seven, but seventy-seven times
Seven seals, seven stars, seven lamp stands in Revelation.

### NUMBER : TWELVE (12)

Ishmael (Son of Abraham) had twelve sons
Twelve tribes of Israel
Jesus chose twelve disciples
Twelve gates and foundations in Revelation.

### NUMBER : FORTY (40)

Raining during the flood
Years Israel wandered in the desert
Days Jesus was tempted by Satan in the desert
Days Jesus appeared to people after his death

-By. Sis. Hanna Ezekiel

பூமி தன் பலனைத் தரும்; தேவனாகிய எங்கள் தேவனே எங்களை ஆசீர்வதிப்பார். -சங். 67:6

# QUIZ FOR CHILDREN

(Write the answers using the New King James Version. Children those who are studying above SECOND Standard can participate)

1. What did Jesus comment about the death of Lazarus?
2. What is the first word of Jesus when he met Mary Megdaline after resurrection?
3. What was the prayer of Jesus for the protection of His disciples?
4. What did Jesus do for His disciples during the last supper?
5. What has Jesus asked Peter after resurrection?
6. What was the voice from heaven declared while Jesus prayed "Father glorify your name"?
7. What is the name of the place to where Jesus was carrying His own cross?
8. What are the functions of Holy Spirit?
9. What did Caiapha advise the Jews about Jesus' death?
10. What should we do to bear much fruit?

**Note:- You can find the ANSWERS from the Gospel of John, Chapters 11 to 21. Submit your answers to the Sunday School Teachers on or before 21.12.2012.**

## ABBRIVIATION


| | | |
|---|---|---|
| NEWS | - | North, East, West, South |
| CHESS | - | Chariot, Horse, Elephant, Soldiers |
| COLD | - | Chronic Obstructive Lung Disease |
| JOKE | - | Joy Of Kinds Entertainment |
| AIM | - | Ambition In Mind |
| DATE | - | Day And Time Evolution |
| EAT | - | Energy And Taste |
| TEA | - | Taste And Energy Admitted |
| PEN | - | Power Enriched in Nib |
| SMILE | - | Sweet Memories In Lips Expression |
| BYE | - | Be with You Every time |

தேவனைப் பாடி; அவருடைய நாமத்தைக் கீர்த்தனம்பண்ணுங்கள். -சங். 68:4



# குறுக்கெழுத்துப் போட்டி

(தயவு செய்து எல்லாவற்றிலும் அதிகாரம் மற்றும் வசனம் ஆகியவற்றை மறக்காமல் குறிப்பிடவும்)




## இடமிருந்து வலம்:

1. 3 எழுத்து. (அதின் .................... வச்சிரக்கல்லால் கட்டப்பட்டிருந்தது)
2. 3 எழுத்து. (யோவான் அந்த தீவில் இருந்தான்)
3. 6 எழுத்து. (வானத்திலிருந்து உண்டான சத்தம் அது)
4. 5 எழுத்து. (அது பகலில் அடைக்கப்படுவதே இல்லை)

## மேலிருந்து கீழ்: —

5. 5 எழுத்து. (ஆசியாவில் இருக்கிற ஏழு சபைகளில் ஒன்று)
6. 6 எழுத்து. (நாம் எப்படி எனக்கு ஒரு குறைவுமில்லையென்று சொல்லுகிறோம்)
7. 9 எழுத்து. (இவர்கள் எதனால் ஐசுவரியவான்களானார்கள்)
8. 3 எழுத்து. (இவர் கோத்திரத்தில் பன்னீராயிரம் முத்திரை போடப்பட்டது)
9. 3 எழுத்து. (ஆசியாவிலிருக்கிற ஏழு சபைகளில் ஒன்று)

உமது முகத்தை உமது அடியேனுக்கு மறையாதேயும் -சங். 69:17

குறிப்பு:- வேதாகமத்தில்... வெளிப்படுத்தின விசேஷத்தில் பதிலைத் தேடுங்கள்; காணலாம். சரியான விடைகளை வருகிற 21-12-2012 -ம் தேதிக்குள் சபையின் செயலாளரிடம் நேரில் தெரிவிக்கவும்.

## என் பிரியமே

""கர்த்தருக்கு பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப் பாருங்கள்"" (எபே. 5:10)

**கர்த்தருக்கு பிரியம்: —**

1. இஸ்ரவேலை ஆசீர்வதிப்பது (எண். 24:1)
2. நீதியும் நன்மையும் செய்வது (சங். 11:7)
3. கீழ்ப்படிவது (1சாமு. 15:22)
4. மனுஷர்மேல் பிரியம் (சங். 149:4)
5. செம்மையானவர்களின் ஜெபம் (நீதி. 15:8)
6. உற்சாகமாய்க் கொடுப்பது (2கொரி. 9:7)
7. விசுவாசம் (எபி. 11:6)
8. துதிப்பதும் ஸ்தோத்திரம் செய்வதும் (சங். 50:23)

**இயேசுவுக்கு பிரியம்: —**

1. இரக்கம் (மத். 12:7)
2. சத்துருக்களை சிநேகிப்பது (லூக். 6:35)
3. மன்னித்தல் (மத். 18:22)
4. விசுவாசம் (மாற். 9:23)
5. தாழ்மைப்படுவது (மத். 11:29)
6. சுகமளிப்பது (மத். 14:14)
7. ஜெபிப்பது (மத். 26:41)
8. ஊழியம் செய்வது (மாற். 10:45)

**கர்த்தரின் அன்பில்**
**சகோ. சுகுமார்**

## கிஸ்துமஸ் புத்தாண்டு வாழ்த்துக்கள்

**இரட்சகராய் பிறந்த இயேசு கிறிஸ்து, இம்மானுவேலராய் உங்களோடு என்றும் வாழ வாழ்த்துக்கள்**

**- அ. த. தி**

# ஊழியம் செய்ய இவர்களுக்காக ஜெபிக்கிறீர்களா!

**தலைவர்**
சகோ. ரவிச்சந்திரன்
66889706 / 23913675

**செயலாளர்**
சகோ. ஸ்டாலின்
66021072

**பொருளாளர்**
சகோ. விசு
97686317

**பெண்கள் ஐக்கிய தலைவி**
Sis. ஜெயக்கொடி ஜான்வெஸ்லி
99145593 / 23731904

**வாலிப ஐக்கிய தலைவர்**
சகோ. அற்புதராஜ்
60692485







## சபையின் அஞ்சல் பெட்டி விலாசம்

------------ (Your Name), P.Box No-46795, 64018-Fahaheel, Kuwait

உங்கள் ஜெப விண்ணப்பங்களை அனுப்புவீர்களானால் உங்களுக்காக ஜெபிக்கிறோம்

Church website: www.ahmaditamilcongregation.org
Church E-mail ID: ahmaditamil.kw@hotmail.com

சபையின் வாகனத் தேவையின் அழைப்புக்கு: 65868048

Private Circulation only